டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
30.7.2023 ஞாயிற்றுக்கிழமை • மதுரை • பக்கங்கள் 24 • Online Edition • www.kaalaimani.com

# காந்திநகரில் செமிகான் இந்தியா 2023 பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

காந்திநகர், ஜூலை 29

மின்னணுத் துறையில் கவனம் செலுத்தி தொழில்நுட்பப் புரட்சியை இந்தியா முன்னெடுத்து வருகிறது. புரட்சியின் ஒரு பகுதியாக, செமிகண்டக்டர்கள் தவிர்க்க முடியாத பங்கைக் கொண் டுள்ளன. தகவல்தொடர்பு, பாதுகாப்பு, மோட்டார் வாகனங்கள், கணினி சாதனங்கள் உட்பட அனைத்துத் துறைகளிலும் பயன்பாடுகளை அவை கொண்டுள்ளன. தேச முன்னேற்றத்தின் முக்கிய தூணான 'மின்னணு' மற்றும் தற்சார்பு இந்தியா என்ற தொலைநோக்கு பார்வையை வலுப்படுத்துவதன் மூலம், இந்தியா அதன் மதிப்புத் தொடரை விரிவுபடுத்தவும் ஆழப்படுத்தவும், உலகத் தரம் வாய்ந்த செமிகண்டக்டர் உற்பத்தி சூழலை எளிதாக்கவும் தயாராக உள்ளது.

செமிகண்டக்டர் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான மையமாக இந்தியாவை எடுத்துக் காட்ட, செமிகான் இந்தியா 2022 மாநாடு கடந்த ஆண்டு பெங்களூரில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, இந்தியா செமிகண்டக்டர் இயக்கம் குஜராத்தின் காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திரில் இந்தியாவின் செமிகண்டக்டர் சூழல் அமைப்பைத் தூண்டுதல் என்ற கருப்பொருளுடன் செமிகான் இந்தியா 2023 மாநாட்டை நடத்துகிறது.. இந்த மாநாட்டில் 23 நாடுகளைச் சேர்ந்த 8,000-க்கும் அதிகமானோர் கலந்து கொண்டுள்ளனர். செமிகான்இந்தியா 2023-ல் மைக்ரான் டெக்னாலஜி, அப்ளைடு மெட்டீரியல்ஸ், ஃபாக்ஸ்கான், கேடன்ஸ் மற்றும் ஏஎம்டி போன்ற முக்கிய உலகளாவிய நிறுவனங்களின் தொழில்துறை தலைவர்கள் மற்றும் தொழில்துறை சங்கமான செமி ஆகியவற்றின் தொழில்துறை தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

மூன்று நாள் செமிகான் இந்தியா 2023 ஐ பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார், மேலும் தனது சிறப்பு உரையில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் செமிகண்டக்டர்களின் பங்கு மற்றும் செமிகான் இந்தியா திட்டத்தின் கீழ் செமிகண்டக்டர்

உற்பத்திச் சூழல் அமைப்பை உருவாக்க இந்தியா எவ்வாறு உறுதி பூண்டுள்ளது என்பதை வலியுறுத்தினார். மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு மற்றும் ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மின்னணு உற்பத்தியில், குறிப்பாக செமிகண்டக்டர்களில் கவனம் செலுத்தி இந்தியாவின் ஒவ்வொரு துறையையும் மாற்றியமைப்பதில் பிரதமரின் பங்களிப்பை எடுத்துரைத்தார். கூட்டத்தில் உரையாற்றிய குஜராத் முதலமைச்சர் பூபேந்திர படேல், மின்னணு மற்றும் செமிகண்டக்டர்கள் குறித்த பிரதமரின் தொலைநோக்கு வழிகாட்டுதலைப் பாராட்டினார்.

உலகளாவிய பல்வேறுதொழில்துறை தலைவர்கள் இந்தியாவின் செமிகண்டக்டர் சூழல் அமைப்பு' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினர். செமிகண்டக்டர் துறையில் முக்கிய பங்கு வகிக்கும் மைக்ரான் சார்பாக பேசிய சஞ்சய் மெஹ்ரோத்ரா, இந்தியாவின் உற்பத்திச் சூழல் அமைப்பை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை எடுத்துரைத்தார். இந்தியாவின் செமிகண்டக்டர் பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் மைக்ரான் பெருமிதம் கொள்கிறது என்றும் அவர் கூறினார். செமிகண்டக்டர் துறையில் இந்தியாவின் முக்கிய பலங்களில் வலுவான அரசு ஆதரவு மற்றும் முன்முயற்சிகள், தொழில்நுட்ப திறமைகளின் தொகுப்பு, பன்னாட்டு நிறுவனங்களின் இருப்பு மற்றும் நடந்து வரும் டிஜிட்டல் இந்தியா மாற்றம் ஆகியவை அடங்கும் என்று கேடன்ஸ் நிறுவனத்தின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான அனிருத் தேவ்கன் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, தூய்மையான எரிசக்தி முன்முயற்சிகள் மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங், மேம்பட்ட தரவு உருவாக்கம் மற்றும் பரிமாற்ற அமைப்புகள் மூலம் டிஜிட்டல் மாற்றம் போன்ற காரணிகளால் செமிகண்டக்டர் தொழில் வளர்ச்சியை அனுபவித்து வருவதாக அப்ளைடு மெட்டீரியல்ஸ் எஸ்பிஜி தலைவர் பிரபு ராஜா கூறினார். ஃபிளாஷ் மெமரி மற்றும் அத்தியாவசிய சேமிப்பக உள்கட்டமைப்பில் முன்னணி நிறுவனமான வெஸ்டர்ன் டிஜிட்டல் தலைவர் திரு சிவ சிவராம், இந்தியாவில் ஒரு செமிகண்டக்டர் விநியோக தொடரை நிறுவ, அறிவுசார் சொத்து உருவாக்கம் அவசியம் என்று கருதினார்.

அட்வான்ஸ்ட் மைக்ரோ டிவைசஸ் நிறுவனத்தின் தலைமைத் தொழில்நுட்ப அதிகாரி (ஏ.எம்.டி., சி.டி.ஓ) மார்க் பேப்பர்மாஸ்டர், செயற்கை நுண்ணறிவு ஊடுருவல் நிலை குறித்தும், இந்தியாவுக்கான அதன் மகத்தான திறன் குறித்தும் பேசினார். இந்த துறையில் புதுமைகளை ஏஎம்டி தீவிரமாக முன்னெடுத்து வருகிறது,

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.




அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் 400 மில்லி யன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்து ஏஎம்டிக் கான உலகின் மிகப்பெரிய வடிவமைப்பு மையமாக இந்தியாவை நிறுவ விருக்கிறது என்றும் அவர் கூறினார். மூர் விதி சகாப்தத் திற்குப் பிந்தைய சவால்கள் மற்றும் வாய்ப்புகளை ஃபாக்ஸ்கானின் தலைமை உத்தி வகுத்தல் அதிகாரி எஸ்.ஒய்.சியாங் முன்வைத்தார். கணினி வடிவமைப்பு மற்றும் பகிர்வு, பேக்கேஜிங் மற்றும் பிசிபி தொழில்நுட்பம் மற்றும் ஐஓடி போன்ற பயன்பாடுகளின் தேவை களைப் பூர்த்தி செய்வதில் செமிகண்டக்டர் தொழில்துறையில் வளர்ந்து வரும் தேவைகளை அவர் சுட்டிக்காட்டினார்.

கூடுதலாக, செமிகண்டக்டர் மற்றும் காட்சிச் சூழல் அமைப்பை உள்ளடக்கிய பல்வேறு பொருத்தமான கருப்பொருள்கள் குறித்து விவாதிக்க குழு விவாதங்கள் நடைபெற்றன. டாக்டர் மணீஷ் ஹூடா, எஸ்.சி.எல். விவேக் சர்மா, எஸ்.டி.எம்.,டாக்டர் யீ ஷை சாங், தொழில்நுட்ப தூதர், ஐசிஇஏ; ரோஹித் கிர்தர், இன்ஃபினியன் டெக்னாலஜிஸ்; ஸ்ரீராம் ராமகிருஷ்ணன், வர்த்தகத் தலைவர், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்; தர்ஷன் ஹிரானந்தனி, ஹிராநந்தனி குழுமம் ஆகியோர் இந்தியாவில் காம்பவுண்ட் செமிகண்டக்டர்கள் தயாரிப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விவாதித்தனர். எலெக்ட்ரிக் வாகனங்களுக்கு சிலிக்கான் கார்பைடுக்கு முன்னுரிமை அளிக்கவும், கணினி வடிவமைப்பு மற்றும் காலியம் நைட்ரைடு ஆராய்ச்சியில் கவனம் செலுத்தவும் பேச்சாளர்கள் பரிந்துரைத்தனர்.

தொழில்நுட்ப-நிதி எதிர்பார்ப்புகளை வலியுறுத்துவதற்கான இந்திய அரசாங்கத்தின் அணுகுமுறை குறித்தும் விவாதித்தனர். வணிகத் திட்டம் மற்றும் செயலாக்கத் திட்டத்தின் நம்பகத்தன்மை இந்திய செமிகண்டக்டர் இயக்கத்தின் (ஐ.எஸ்.எம்) எதிர்கால முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கான வழிகாட்டும் கொள்கை களாக செயல்படும் என்று அவர்கள் எடுத்துரைத்தனர். உலகளா விய செமிகண்டக்டர் துறையின் வளர்ச்சியில் இந்தியாவுக்கு ஒரு பெரிய பங்கு உள்ளது, மேலும் செமிகான் இந்தியா 2023 இந்தியாவில் செமிகண்டக்டர் சூழல் அமைப்பை வடிவமைக்கும் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்க பங்கேற்பாளர்களுக்கு ஒரு தளத்தை வழங்கியது.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# அடுத்த 10 ஆண்டுகளில் செமிகண்டக்டர் தயாரிப்பில் இந்தியா முக்கிய நாடாக மாறும்: ராஜீவ் சந்திரசேகர்

புது தில்லி, ஜூலை 29

இந்தியா அடுத்த 10 ஆண்டுகளில் செமிகண்டக்டர் தயாரிப்பில் முக்கிய நாடாக உருவாகும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.



இது குறித்து விரிவான செய்தியாவது:

தற்போது உலக நாடுகள் மின்னணு வாகனங்கள் நோக்கி நகர்ந்து வருகிற நிலையில், செமிகண்டக்டர்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. இந்தியா அதன் பயன்பாட்டுக்கான செமிகண் டக்டர்களை வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்துவந்த நிலையில், தற்போது உள்நாட்டிலேயே செமிகண்டக்டர் தயாரிப்பு கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

செமிகண்டக்டர் துறையில் அந்நிய முதலீட்டை ஈர்க்கும் நோக்கில், வெளிநாட்டு நிறுவனங்களிடம் மத்திய அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது. இதன் விளைவாக, கடந்த மாதம் அமெரிக் காவைச் சேர்ந்த மைக்ரான் நிறுவனம் இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் செமிகண்டக்டர் ஆலை அமைக்க ரூ.6,700 கோடி முதலீடு செய்வதாக அறிவித்தது.

இந்நிலையில், இந்தியா செமிகண்டக்டர் தயாரிப்பில் அடுத்த 10 ஆண்டுகளில் முக்கிய நாடாகமாறும் என்று ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். இது குறித்து துமேலும் அவர் கூறுகையில், உலகநாடுகள் செமிகண்டக்டர் தயாரிப்புக்கு ஏற்ற நாடாக இந்தியாவை பார்க்க ஆரம்பித்துள்ளன.

செமிகண்டக்டர் துறையை ஊக்குவிக்க மத்திய அரசு, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் 10 பில்லியன் டாலர் (ரூ.82,000 கோடி) நிதி ஒதுக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. இது அடுத்த பத்து ஆண்டுகளில் செமிகண்டக்டர் துறையில் இந்தியாவை முக்கிய நாடாக மாற்றும். இதன் மூலம், சீனா செமிகண்டக்டர் துறையில் 25 ஆண்டுகளில் சாதிக்காததை இந்தியா 10 ஆண்டுகளில் சாதிக்கும் என்று தெரிவித்தார்.

# 5ஜி சேவையில் ஆர்வம் காட்டாத வோடஃபோன், பிஎஸ்என்எல் நிறுவனங்கள்




மும்பை, ஜூலை 29

ஜியோ, ஏர்டெல் நிறுவனங்கள் 5ஜி சேவையை வழங்குவதில் முனைப்பு காட்டி வரும் நிலையில் வோடஃபோன், பிஎஸ்என்எல் நிறுவனங்கள் ஆர்வம் காட்டாமல் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து விரிவான செய்தியாவது: நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் 5ஜி சேவையை வழங்க தொலைத்தொடர்பு நிறுவனங்கள் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இதுவரை நாடு முழுவதும் 2,81,948 5ஜி டவர்கள் நிறுவப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் மிகவும் வேகமாக தனது பணிகளை செய்து வருகிறது.

ஜூலை 7, 2023 நிலவரப்படி ஜியோ நிறுவனம் இதுவரை நாடு முழுவதும் 2,28,689 5ஜி டவர்களை நிறுவியுள்ளது. கடந்த 2022 அக்டோபர் மாதம் முதல் இதற்கான பணிகளைச் செய்து வரும் ஜியோ, தனித்துவமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. அதைத் தொடர்ந்து சுனில் மிட்டலின் ஏர்டெல் 53,223 டவர்களை அமைத்துள்ளது.

நாட்டின் மூன்றாவது மிகப்பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான வோடஃபோன் ஐடியாவும், அரசின் தொலைத்தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல் ஆகிய இரண்டும் 5ஜி சேவையில் ஆர்வம் காட்டவில்லை. வோடஃபோன் ஐடியா, தில்லி மற்றும் புணேவில் இதுவரை வெறும் 36 5ஜி டவர்களை சோதனை அடிப்படையில் அமைத்துள்ளது. வோடஃபோன் ஐடியாவில் தற்போது நிதி இல்லாதது உள்ளிட்ட சில பிரச்னைகளை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதேபோல், அரசுக்குச் சொந்தமான தொலைத்தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல் இன்னும் அதன் 4ஜி நெட்வொர்க்கிற்கான சோதனைகளைத் தான் நடத்தி வருகிறது. பிஎஸ்என்எல்-ல் இன்னும் 4ஜி சேவைகளே இல்லாத நிலையில் 5ஜி சேவை கேள்விக் குறியாகவே உள்ளது. இருப்பினும் தொலைத்தொடர்பு அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் கூறுகையில், பிஎஸ்என்எல் தனது 4ஜி சேவையை அறிமுகப்படுத்தியவுடன் அது உடனடியாக 5ஜி நெட்வொர்க்கிற்கு மாறும் என்று தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் சாதனங்களை தயாரிக்க திட்டம்: சோனி

புது தில்லி, ஜூலை 29

தங்கள் தயாரிப்புகளின் தேவை அதிகரித்து வருவதை தொடர்ந்து, சோனி நிறுவனம், அதன் தயாரிப்புகளை இந்தியாவில் மேற் கொள்வது குறித்து பரிசீலித்து வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இது குறித்து விரிவான செய்தியாவது: ஜப்பான் நாட்டை சேர்ந்த சோனி நிறுவனம், தங்கள் இசை சாதனங்களை, இந்தியாவில் தயாரிப்பது குறித்து, முதற்கட்ட ஆய்வுகளை துவங்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்தியாவில் தயாரிப்புகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை மதிப்பீடு செய்யும் பணிகள் நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது. இதுகுறித்து, சோனி இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சுனில் நாயர் தெரிவித்துள்ள தாவது:

சோனியின், ஒயர்லெஸ் சாதனங்கள், இரைச்சலை ரத்து செய்யும் ஹெட்போன்கள், ஹோம்ஸ்பீக்கர்ஸ் போன்றவை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளது. பெருந்தொற்று காலத்திற்கு பிறகு, சோனியின் தயாரிப்புகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. கடந்தாண்டு வளர்ச்சி, 30 சதவீதமாக இருந்தது. அடுத்தாண்டு, இது 40 சதவீதமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார். எனினும், இந்தியாவில் ஒலி சாதனங்கள் தயாரிப்பது குறித்து, தற்போது எதுவும் கூற முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# மிதக்கும் விற்பனையகம்:அமேஸான் அறிமுகம்

ஸ்ரீநகர், ஜூலை 29

ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகரிலுள்ள தால் ஏரியில் தனது ஐ ஹேவ் ஸ்பேஸ் விற்பனையகத்தை இணையவழி வர்த்தக நிறுவனமான அமேஸான் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: இந்தியாவில் அமேசான் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள முதல் மிதக்கும் விற்பனையகம் இதுவாகும். இதன் மூலம், தால் ஏரியிலுள்ள படகு வீடுகளில் வசிப்பவர்களுக்குத் தேவைப்படும் பொருள்கள் அவர்களது இல்லத்திலேயே மிக விரைவில் விநியோகிக்க வழி ஏற்பட்டுள்ளது.

மேலும், சிறு தொழில்முனைவோருக்கு இதன் மூலம் தொழில்வாய்ப்பு அதிகரித்துள்ளது. இந்தியா முழுவதும் 28,000 இடங்களில் வசிப்பவர்கள் மற்றும் அந்தப் பகுதி சிறு வணிகர்களுக்கு பலனளிக்கும் வகையில், ஐ ஹேவ் ஸ்பேஸ் திட்டத்தை அமேஸான் நிறுவனம் கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.



# வேகமாகக் குறைந்த திரெட்ஸின் பயன்பாடு

நியூயார்க், ஜூலை 29

திரெட்ஸ் செயலி, பாதிக்கும் மேற்பட்ட பயனர்களை இழந்துவிட்டதாக மெட்டா நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் ஒப்புக்கொண்டுள்ளார்.



இது குறித்து விரிவான செய்தியாவது: பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ்ஆப் ஆகியவற்றின் தாய் நிறுவனமான மெட்டா, ட்விட்டருக்குப் போட்டியாக திரெட்ஸ் என்ற செயலியை கடந்த ஜூலை 6ல் அறிமுகப்படுத்தியது. அறிமுகமான 5 நாள்களில் அதில் 10 கோடி பேர் இணைந்தனர். பிற சமூக வலைத்தளங்களை ஒப்பிடுகையில், தொடங்கிய சில நாள்களில் அதிக பயனர்களைப் பெற்ற செயலி திரெட்ஸ் என்று கூறலாம். ஆனால், அதன் பயன்பாட்டை பொருத்தவரையில் நாளுக்கு நாள் குறைந்து வருவதாக தகவல் வெளியான நிலையில், தற்போது மெட்டா நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் அதனை ஒப்புக்கொண்டுள்ளார்.

திரெட்ஸில் உள்ள பயனர்களின் எண்ணிக்கை பாதிக்கும் மேல் குறைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். தனியார் செய்தி நிறுவன நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட மார்க், 10 கோடிக்கும் அதிக மான மக்கள் கணக்கு தொடங்கி, அவர்களில் முழுமையாக அல்லது பாதி பேராவது செயலியை தொடர்ந்து பயன்படுத்தி னால் நன்றாக இருக்கும். ஆனால், நாங்கள் இன்னும் அந்த நிலைமைக்குச் செல்லவில்லை. எனினும் தொடக்கத்தில் திரெட்ஸ் பயன்பாடு குறைந்தது இயல்பானதுதான். திரெட்ஸ் செயலில் மேலும் பல புதிய அம்சங்கள் சேர்த்தால் பயனர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரெட்ஸ் செயலியில் பயனர்களை தக்கவைக்க முயற்சிப்போம். இன்ஸ்டாகிராமில் உள்ளவர்கள் முக்கியமான திரெட்ஸ் பதிவுகளை பார்க்க உறுதி செய்வோம் என்றார். இன்ஸ்டாகிராமும், திரெட்ஸ் செயலியும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. திரெட்ஸ் செயலியில் உள்நுழைய இன்ஸ்டாகிராம் கணக்கு தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு பங்கு சந்தையில் இனி நிறுவனங்கள் நேரடியாக பட்டியலிடலாம்: நிதியமைச்சர் தகவல்

புது தில்லி, ஜூலை 29

இந்தியாவில் உள்ள பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத நிறுவனங்கள், வெளிநாடுகளில் உள்ள பங்குச்சந்தை குறியீடுகளிலும், அகமதாபாதில் உள்ள நிப்டி ஐஎப்எஸ்சி பங்குச் சந்தை குறியீட்டிலும், இனி நேரடியாக பட்டியலிட அனுமதிக்கப்படும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.



இதன் வாயிலாக, உலகளாவிய முதலீடுகளை நிறுவனங்கள் எளிதில் ஈர்க்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். நிப்டி ஐஎப்எஸ்சி என்பது, இந்திய தேசிய பங்குச் சந்தைக்குச் சொந்தமான ஒரு துணை நிறுவனமாகும். குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரமான, கிப்ட் சிட்டியில் உள்ள சர்வதேச நிதி சேவை மையத்தில் தொடங்கப்பட்ட சர்வதேச வர்த்தகத்திற்கான ஒருதளமாகும். இந்திய பெருநிறுவனங்கள் மற்றும் அதன் வெளிநாட்டு கிளைகள், தற்போது வெளிநாட்டு நிதி மையங்களில் மேற்கொள்ளப்படும் நிதிச் சேவைகள் மற்றும் பரிவர்த்தனைகளை, இந்தியாவிற்கு மாற்றி கொண்டு வருவதற்கு ஐஎப்எஸ்சி உதவுகிறது. வெளிநாடுகளில், இந்திய நிறுவனங்களை நேரடியாக பட்டியலிட அனுமதிக்கும் அரசாங்கத்தின் முந்தைய முடிவைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன் வாயிலாக, உலகளவில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை எளிதாக்குவது மட்டுமின்றி, இந்திய நிறுவனங்களுக்கு சிறந்த மதிப்பீடுகளையும் பெற்றுத்தரும் என்று கருதப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஜூலை ஆரம்பத்தில், தேசிய பங்குச் சந்தையின் நிப்டி ஒப்பந்தங்களை, சிங்கப்பூர் பங்குச் சந்தை குறியீடான எஸ்.ஜி.எக்ஸ்., நிப்டி–இல் இருந்து, குஜராத்தில் உள்ள நிப்டி ஐ.எப்.எஸ்.சி.,க்கு மாற்றப்பட்டது என்பது கூடுதல் தகவல்.

# இந்தியாவில் புற்றுநோய்க்கு 8 லட்சம் பேர் உயிரிழப்பு

புது தில்லி, ஜூலை 29

புற்றுநோயால் நாட்டில் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் பாதிப்பு குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது. இந்த கேள்விக்கு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சகம் எழுத்துப் பூர்வ பதில் அளித்துள்ளதாவது மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, தேசிய சுகாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக, தொற்று அல்லாத நோய்களைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் தேசிய திட்டத்தின் கீழ் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளையும், நிதி உதவிகளையும் வழங்குகிறது. புற்றுநோய், மேற்படி திட்டத்தின் ஒரு பகுதி ஆகும். புற்றுநோய் தடுப்புக்கான உள்கட்டமைப்பு, மனிதவள மேம்பாடு, சுகாதார மேம்பாடு மற்றும் விழிப்புணர்வை உருவாக்குதல், ஆரம்பகால நோயறிதல் போன்றவற்றில் இந்த திட்டம் கவனம் செலுத்துகிறது. சிகிச்சைக்காக நோயாளிகளுக்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது..

மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, தேசிய சுகாதார இயக்கத்தின் ஒரு பகுதியாக, தொற்று அல்லாத நோய் களைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் தேசிய திட்டத்தின் கீழ் மாநி லங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை யும், நிதி உதவிகளையும் வழங்குகிறது. மேலும், புற்றுநோய் தடுப்புக்கான உள்கட்டமைப்பு, மனிதவள மேம்பாடு, சுகாதார மேம்பாடு மற்றும் விழிப்புணர்வை உருவாக்குதல், ஆரம்பகால நோயறிதல் போன்றவற்றில் இந்த திட்டம் கவனம் செலுத்துகிறது. சிகிச்சைக்காக நோயாளிகளுக்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

அதெநேரத்தில், நாட்டில் கடந்த 2020-ம் ஆண்டு 13,92,179 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு இருந்துள்ளது. இது 2021-ம் ஆண்டு 14,26,447 ஆக அதிகரித்து, 2022-ம் ஆண்டு 14,61,427 ஆக உயர்ந்துள்ளது. அதைப்போல் புற்றுநோய் இறப்புகளை எடுத்துக்கொண்டால் 2020-ம் ஆண்டு 7,70,230 பேரும், 2021ம் ஆண்டு 7,89,202 பேரும், 2022-ம் ஆண்டு 8,8,558 பேரும் இறந்துள்ளனர். புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள மாநிலமாக உத்தரபிரதேசம் உள்ளது. அங்கு கடந்த ஆண்டு 2,10,958 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். தமிழ்நாட்டில் 93,536 பேருக்கு பாதிப்பு உள்ளது. கடந்த ஆண்டு நிலவரப்படி நாடு முழுவதும் மொத்தம் 14,61,427 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். புற்றுநோய் இறப்பிலும் உத்தரபிரதேசம் முன்னிலையில் உள்ளது. அங்கு ஒரு லட்சத்து 16,818 பேர் இறந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 50,841 பேர் இறந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.3,300 கோடி முதலீடு செய்ய ஏஎம்டி திட்டம்

புது தில்லி, ஜூலை 29

உயர் செயல்திறன் கணினி நிறுவனமான ஏஎம்டி இந்தியாவில், அடுத்த ஐந்து ஆண்டுகளில், ரூ.3,300 கோடி வரைமுதலீடு செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளது.

மேலும் ஐந்து லட்சம் சதுரடி பரப்பளவில் பெங்களூருவில் மிகப்பெரிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வளாகத்தையும் தொடங்க உள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்த வளாகம் நடப்பாண்டு இறுதிக்குள் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளதாவது:

ஏஎம்டியின் மிகப்பெரிய இந்த மையம், இந்தியாவின் உலகத்தரம் வாய்ந்த செமிகண்டக்டர் வடிவமைப்பு மற்றும் புதிய சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கும். மேலும், இது நாட்டின் திறமையான செமிகண்டக்டர் பொறியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகப்பெரிய வாய்ப்புகளை வழங்கும். இந்தியா ஒரு உலகளாவிய திறமை மையமாக மாற விரும்பும் பிரதமர் நரேந்திர மோடியின் எண்ணத்துக்கு இத்திட்டம் ஊக்கம் அளிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# கார் கடன்களுக்கு நிலை வட்டி விகிதம் பேங்க் ஆப் பரோடா அறிமுகம்

மும்பை, ஜூலை 29

நாட்டின் முன்னணி பொதுத் துறை வங்கிகளில் ஒன்றான பரோடா வங்கி (பிஓபி), தாங்கள் வழங்கும் கார் கடன்களுக்கு நிலை வட்டி விகிதத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக செய்திகள் வெளி வந்துள்ளது. இது குறித்து பேங்க ஆப் பரோடா வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வங்கியில் கார் கடன் வாங்குபவர்கள், அவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப நிலை வட்டி விகிதத்தையோ, மாறக்கூடிய வட்டி விகிதத்தையோ தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, மின்சாரத்தில் இயங்கக் கூடிய வாகனங்கள் உள்ளிட்ட புதிய கார்களை வாங்குவோர் பெறக்கூடிய கடன்கள், ஓராண்டு எம்சிஎல்ஆர் வகைக் கடனாக அளிக்கப்படும். கடன் காலம் முடியும் வரை அதற்கான வட்டியில் எந்த மாற்றமும் இருக்காது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தங்கம் மற்றும் வெள்ளி போன்ற கனிமங்களை ஆய்வு செய்ய தனியார் துறைக்கு அனுமதி



புது தில்லி, ஜூலை 29

லித்தியம் உள்ளிட்ட கனிமங்களை தனியார் துறை எடுக்க அனுமதிக்கும் சுரங்கங்கள், கனிமங்கள் மேம்பாடு மற்றும் ஒழுங் குமுறை திருத்த மசோதா, 2023 மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த சட்டத்தின் மூலமாக, மின்சார வாகனங்களில் பேட்டரிகள் தயாரிக்கப் பயன்படும் முக்கிய மூலப் பொருளான லித்தியம் மற்றும் மேலும் 5 அணு கனிமங்கள், தடை செய்யப்பட்ட கனிமங்கள் பிரிவிலிருந்து நீக்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டத்தின்படி 12 கனிமங்கள், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மட்டுமே எடுக்க முடியும். ஆனால், இந்த சட்டத்திருத்தத்தின் மூலமாக தங்கம் மற்றும் வெள்ளி போன்ற கனிமங்களை ஆய்வு செய்ய தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் லித்தியம், பெரிலியம், நியோபியம், டைட்டானியம், டான்டலம், சிர்கோனியம் ஆகிய 6 தனிமங்களை தனியார் நிறுவனங்கள் வெட்டி எடுக்க முடியும்.

விண்வெளி துறை, மின்னணு, தகவல் தொடர்பு, எரிசக்தி துறை, மின் பேட்டரிகள் ஆகியவற்றில் இந்த தனிமங்கள் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. புதிய மசோதாவின் படி, மேற்குறிப்பிட்ட 6 கனிமங்களின் ஆய்வு மற்றும் சுரங்கம் தனியார் துறைக்கு விடப்படும். இதனால் நாட்டில் கனிமங்களின் ஆய்வு மற்றும் சுரங்கங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும் என்று மத்திய அரசுத் தரப்பில் மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, இந்த மசோதாவில் உள்ள திருத்தங்கள் இந்தியாவை மாற்றியமைக்கும் என்று கூறியதுடன், கடற்கரை மணல் தாதுக்களான இல்மனைட், ரூட்டைல், லியூகோக்சின், கார்னெட், மோனா சைட், சிர்கான் மற்றும் சில்லிமனைட் போன்ற கனிமங்கள் பொதுத்துறை நிறுவனங்களுக்காக ஒதுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# புதிய ஹோன்டா எலிவேட் மாடல் இந்தியாவில் செப்டம்பர் முதல் வாரத்தில் வெளியாகும்

சென்னை, ஜூலை 29

ஹோன்டா நிறுவனத்தின் எலிவேட் எஸ்யுவி மாடல் ஜூன் 6ம் தேதி அறிவிக்கப்பட்டது. புதிய ஹோன்டா எலிவேட் மாடல் இந்தியாவில் செப்டம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் வெளியாகும் என்று தகவல் வெளியாகி உள்ளது. வெளியீட்டை தொடர்ந்து ஹோன்டா எலிவேட் இந்திய வினியோகமும் துவங்கிவிடும் என்று தெரிகிறது. இந்த காரின் வெளியீட்டுக்கு முன், அதன் மைலேஜ் பற்றிய விவரங்களை ஹோன்டா அறிவித்து இருக்கிறது.




ஹோன்டா எலிவேட் மாடல் ஹோன்டா சிட்டி காரை தழுவி உருவாக்கப் பட்டு இருக்கும் எஸ்யுவி மாடல் ஆகும். இதன் டிசைன் மற்றும் என்ஜினி யரிங் பணிகள் இந்தியா விலேயே மேற்கொள்ளப் பட்டு இருக்கிறது. இந்த காரில் 1.5 லிட்டர் என்ஏ பெட்ரோல் என்ஜின், 6 ஸ்பீடு மேனுவல் மற்றும் சிவிடி டிரான்ஸ்மிசன் வழங்கப்படுகிறது. இந்த என்ஜின் 119 ஹெச்பி பவர், 145 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்துகிறது.

இந்த கார் மேனுவல் வேரியன்ட் லிட்டருக்கு 15.31 கிலோமீட்டர்களும், ஆட்டோமேடிக் வேரியன்ட் லிட்டருக்கு 16.92 கிலோமீட்டர்கள் வரை செல்லும் என்று ஏஆர்ஏஐ சான்று பெற்று இருக்கிறது. ஹோன்டா சிட்டி போன்று, இந்த காரில் ஹைப்ரிட் பவர்டிரெயின் வழங்கப்படவில்லை. அம்சங்களை பொருத்தவரை ஹோன்டா எலிவேட் மாடலில் 10.25 இன்ச் டச் ஸ்கிரீன் வசதி கொண்ட இன்போடெயின்மென்ட் சிஸ்டம், வயர்லெஸ் மொபைல் கனெக்டிவிட்டி, ஆட்டோமேடிக் கிளைமேட் கன்ட்ரோல், வயர்லெஸ் சார்ஜர், டிஜிட்டல் இன்ஸ்ட்ரூமென்ட் கிளஸ்டர், குரூயிஸ் கன்ட்ரோல் வழங்கப்படுகிறது. இத்துடன் ஸ்டீரிங்கில் மவுன்ட் செய்யப்பட்ட கன்ட்ரோல்கள், எலெக்ட்ரிக் சன்ரூஃப் மற்றும் ஹோன்டா சென்சிங் ஏடிஏஎஸ் சூட் வழங்கப்படுகிறது. இந்திய சந்தையில் புதிய ஹோன்டா எலிவேட் மாடல் ஹூன்டாய் கிரெட்டா, கியா செல்டோஸ் மற்றும் மாருதி சுசுகி கிரான்ட் விட்டாரா போன்ற மாடல்களுக்கு போட்டியாக அமையும்.

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பப் பதிவு முகாம்கள் அமைச்சர் ஆய்வு

விருதுநகர், ஜூலை 29

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் தமிழ்பாடி காரியாபட்டி வட்டம் கல்குறிச்சி விருதுநகர் வட்டம் ரோசல்பட்டி சத்திரெட்டியாபட்டி ஆகிய இடங்களில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பப் பதிவு முகாம்கள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் வீ.ப.ஜெயசீலன்இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் முன்னிலையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு விண்ணப்பங்களை பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளையும் முகாம்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

விருதுநகர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பங்கள் நியாய விலைக் கடைப் பணியாளர் மூலம் ஒவ்வொரு நியாயவிலைக் கடைப் பகுதியில் முகாம்கள் நடைபெறும் நாள் மற்றும் நேரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் விண்ணப்பம் மற்றும் டோக்கன் ஆகியவை வழங்கப்பட்டு விண்ணப்பப் பதிவு முகாம்கள் முகாம் 24.07.2023 முதல் 04.08.2023 வரையும் இரண்டாம் கட்ட முகாம் 05.08.2023 முதல் 16.08.2023 வரை இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளன. அதன்படி முதல்கட்ட விண்ணப்பப் பதிவு முகாம் 24.07.2023 முதல் நடைபெற்று வருகிறது.

விண்ணப்ப பதிவு முகாம் நடைபெறும் குடியிருப்புகள் தெருக்கள் வார்டு மற்றும் அவற்றுக்கான நாட்கள் குறித்த விவரங்கள் நியாய-விலைக் கடைகளில் தகவல் பலகையாக வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து முகாம் நாட்களிலும் காலை 9.30 மணி முதல் 1 மணி வரையும் பிற்பகல் 2 மணி முதல் 5.30 மணி வரையும் நடைபெறுகிறது.

அதன்படி திருச்சுழி வட்டம் தமிழ்பாடி காரியாபட்டி வட்டம் கல்குறிச்சி விருதுநகர் வட்டம் ரோசல்பட்டி சத்திரெட்டியாபட்டி ஆகிய இடங்களில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பப் பதிவு முகாம்கள் நடைபெற்று வருவதை அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டு விண்ணப்பங்களை பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளையும் முகாம்களுக்கு வருகின்ற மகளிர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

# வருமான வரி கணக்கு தாக்கல் 5 கோடியை தாண்டியது வருமான வரித்துறை தகவல்




புது தில்லி, ஜூலை 29

கடந்த நிதியாண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கல், இதுவரை ஐந்து கோடிக்கும் அதிகமாக செய்யப் பட்டுள்ளதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளி யாகியுள்ளது. இது குறித்து வருமான வரித்துறை தெரிவித்துள்ளதாவது:

கடந்த 2022-23ம் நிதியாண்டிற்கான, வருமான வரி கணக்கு தாக்கல் எண்ணிக்கை ஐந்து கோடியை தாண்டியுள்ளது. தாக்கல் செய்யப்பட்ட 5.03 கோடி கணக்குகளில், 88 சதவீதம் அதாவது 4.46 கோடி கணக்குத் தாக்கல்கள், ஆன்லைன் வாயிலாக சரி பார்க்கப்பட்டுள்ளன.

சரிபார்க்கப்பட்ட வருமான வரி தாக்கல்களில், 2.69 கோடி தாக்கல்களுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன. வருமான வரி தாக்கல் செய்வதற்கு வரும் 31ம் தேதி கடைசி நாள்.

மேலும், வருமான வரி தாக்கல் செய்வது, வரி செலுத்துவது போன்ற பல சந்தேகங்களுக்கு உதவ, துறையின் உதவி மையம் 24 மணி நேரமும் செயல்பாட்டில் இருக்கும். கணக்கு தாக்கல் செய்ய வேண்டிய கடைசி நாள் வரை சனி மற்றும் ஞாயிற்றுக் கிழ மைகளிலும் இந்த சேவைகள் வழங்கப்படும். இத்துடன், தொலை பேசி, சாட் மற்றும் சமூக வலைதளங்களிலும், ஜூலை 31 வரை உதவி மைய சேவைகள் வழங்கப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஜீவன் கிரண் என்ற புதிய காப்பீட்டு திட்டம்

# இந்தியன் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் அறிமுகம்

சென்னை, ஜுலை 29

ஜீவன் கிரண் என்ற புதிய காப்பீட்டு திட்டத்தை இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளி வந்துள்ளது. இது குறித்து எல்ஐசி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: குறைவான கட்டணத் தில் உயர் காப்பீட்டுப் பாதுகாப்பு பெற விரும்புவோருக்காக, ஜீவன் கிரண் என்ற புதிய ஆயுள் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.18 முதல் 65 வரையிலான வயதுடையவர்கள் இந்தத் திட்டத்தில் இணையலாம். 10 முதல் 40 ஆண்டுகள் வரை பாலிசி காலம் கொண்ட இந்தத் திட்டத்தில் குறைந்தபட்ச காப்பீட்டுத் தொகை ரூ.15 லட்சமாகும். ஒற்றைத் தவணையாகவோ, சீரான தவணை முறையிலோ பிரீமியம் செலுத்தலாம். புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் பிரீமியம் தொகை மாறுபடும். குறைந்தபட்ச பிரீமியம் தொகை ஒற்றைத் தவணையில் ரூ.30,000 மற்றும் சீரான தவணை முறையில் ரூ.3,000 ஆகும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வெளிநாட்டு அரிசி ஏற்றுமதிக்கு தடை

# இந்தியாவிடம் விலக்கு கோருகிறது சிங்கப்பூர்



புது தில்லி, ஜூலை 29

அரிசி ஏற்றுமதி தடையில் இருந்து தங்கள் நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்தியாவிடம் சிங்கப்பூர் கோரிக்கை விடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: உள்நாட்டில் சீரான அரிசி விநியோகத்தை உறுதி செய்யவும், அதன் விலையைக் கட்டுக்குள் வைக்கவும் பாசுமதி அல்லாத அரிசி ரகங்களை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு கடந்த 20-ஆம் தேதி தடை விதித்தது. இந்தியா ஏற்றுமதி செய்யும் மொத்த அரிசி அளவில் பாசுமதி அல்லாத ரகங்கள் சுமார் 25 சதம் ஆகும்.

மேலும், அரிசி ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் இந்தியாவின் இந்த முடிவால் பல்வேறு நாடுகளில் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இத்தடையை நீக்குமாறு இந்தியாவுக்கு சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்நிலையில் இது தொடர்பாக சிங்கப்பூரும் இந்தியாவை அணுகியுள்ளது. இந்த விவகாரம் குறித்து சிங்கப்பூர் அரசின் உணவு அமைப்பு தெரிவித்துள்ளதாவது:

அரிசி ஏற்றுமதித் தடையில் இருந்து சிங்கப்பூருக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்திய தரப்பை அணுகியுள்ளோம். அதே நேரத்தில் வேறு இடங்களில் இருந்து அரிசி இறக்குமதியை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. 30-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து சிங்கப்பூருக்கு அரிசு இறக்குமதி செய்யப்படுகிறது. எனினும், சிங்கப்பூரின் அரிசி இறக்குமதியில் 40 சதம் இந்தியாவில் இருந்துதான் வருகிறது. இதுவும் தொடர்ந்து அதிகரித்தே வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் 5ஜி போனை அறிமுகம் செய்யும் ஹானர்

புது தில்லி, ஜூலை 29

ஹானர் நிறுவனம் நிறுவனம் மீண்டும் இந்தியச் சந்தையில் தனது சாதனங்களை அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது. முதலில் ஒரு அட்டகாசமான 5ஜி போனை இந்தியாவில் அறிமுகம் செய்ய உள்ளது இந்நிறுவனம்.



அதாவது ஹானர் 90 எனும் பெயரில் 5ஜி போனை அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது. குறிப்பாக ஹானர் 90 போன் அடுத்த மாதம் அல்லது செப்டம்பரில் வெளியிடப்படலாம். இதன் சிறப்பம்சங்களாவது: 6.7-இன்ச் அமோல்ட் டிஸ்பிளேவுடன் இந்த ஹானர் 90 ஸ்மார்ட்போன் அறிமுகமாகும். மேலும் 120 ஹெர்ட்ஸ் ரெஃப்ரெஷ் ரேட்,1300 நிட்ஸ் ப்ரைட்னஸ், 240 ஹெர்ட்ஸ் டச் சாம்ப்ளிங் ரேட் மற்றும் சிறந்த பாதுகாப்பு வசதியுடன் இந்த போன் வெளிவரும். குவால்காம் ஸ்னாப்டிராகன் 7 ஜென் 1 சிப்செட் உடன் அட்ரனோ 644 ஜிபியு வசதியைக் கொண்டு இந்த ஹானர் 90 ஸ்மார்ட்போன் அறிமுகமாகும்.

அதேபோல் இந்த ஹானர் 90 ஸ்மார்ட்போனில் MagicOS 7.1 சார்ந்த ஆண்ட்ராய்டு 13 இயங்குதள வசதி உள்ளது. 8ஜிபி/12ஜிபி ரேம் மற்றும் 256ஜிபி/512ஜிபி ஸ்டோரேஜ் வசதியுடன் அறிமுகமாகும். 200எம்பி பிரைமரி கேமரா + 12எம்பி அல்ட்ரா வைடு லென்ஸ் + 12எம்பி டெலிபோட்டோ லென்ஸ் என்கிற ட்ரிபிள் ரியர் கேமரா அமைப்பைக் கொண்டுள்ளது இந்த ஹானர் 90 ஸ்மார்ட்போன். எனவே குறைந்த வெளிச்சம் உள்ள பகுதிகளிலும் கூட இந்த ஸ்மார்ட்போன் உதவியுடன் அருமையான படங்களை எடுக்க முடியும். மேலும் 50எம்பி செல்பி கேமராவுடன் இந்த ஹானர் போன் இந்தியாவில் அறிமுகமாகும்.

5000 எம்ஏஎச் பேட்டரி வசதியைக் கொண்டுள்ளது. அதேபோல் 5ஜி, 4ஜி வோல்ட்இ, புளூடூத் 5.2, வைஃபை, என்எப்சி, யுஎஸ்பி டைப்-சி போர்ட் உள்ளிட்ட பல கனெக்டிவிட்டி ஆதரவுகள் இதில் உள்ளன.

# கடந்த நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி 450.95 பில்லியன் டாலர்: மத்திய அரசு தகவல்



புது தில்லி, ஜூலை 29

கடந்த நிதியாண்டில் (2022-23) நாட்டின் ஏற்றுமதி 450.95 பில்லியன் டாலராகவும், இறக்குமதி 714.04 பில்லியன் டாலராக வும் பதிவானதாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது. சர்வேதச வர்த்தகத்தில் சீனாவை இந்தியா அதிகளவில் சார்ந்திருப்பது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது. இது குறித்து கேள்விக்கு மத்திய வர்த்தகத் துறை இணையமைச்சர் அனுப்ரியா படேல் எழுத்துபூர்வமாக அளித்துள்ள பதிலின் விவரம்:

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதி 36.6 சதம் அதிகரித்துள்ளது. அதாவது, 2018-19-இல் 330.07 பில்லியன் டாலராக இருந்த ஏற்றுமதி, 2022-23-இல் 450.95 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. அதேசமயம், இந்தியாவின் இறக்குமதி கடந்த ஐந்தாண்டுகளில் 38.8 சதவீதம் அதிகரித்து, 2018-19இல் 514.07 பில்லியன் டாலரிலிருந்து 2022-23இல் 714.04 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான பொருள்கள் மூலதன பொருள்கள், இடைநிலை பொருள்கள், மூலப்பொருட்கள், இந்தியாவில் எலக்ட்ரானிக்ஸ், டெலிகாம், மின்உற்பத்தி போன்ற வேகமாக வளர்ந்து வரும் துறைகளின் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றன. பொருட் களுக்கான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலமும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும், ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலமும் இந்தத் திட்டங்கள் ஏற்கெனவே முடிவுகளைக் காட்டத் தொடங்கியுள்ளன என தெரிவித்துள்ளார்.

# ஜெனரிக் மருந்துகளை பரிந்துரைக்க மருத்துவர்களுக்கு அறிவுறுத்தல்

புது தில்லி, ஜூலை 29

ஒவ்வொரு மருத்துவரும் பொதுவான பெயர்களைக் கொண்ட மருந்துகளை சட்டப்பூர்வமாகவும், பெரிய எழுத்துக்களிலும் பரிந்துரைக்க வேண்டும் என்று இந்திய மருத்துவ கவுன்சிலின் ஒழுங்குமுறை விதிகள் கூறுகின்றன. மேலும், இது தொடர்பாக இந்திய மருத்துவ கவுன்சில் 22.11.2012, 18.01.2013 மற்றும் 21.04.2017 ஆகிய தேதிகளில் சுற்றறிக்கைகளை வெளியிட்டது.

ஜெனரிக் மருந்துகளின் பரிந்துரையை உறுதி செய்யவும், பொது சுகாதார மையங்களில் வழக்கமான பரிந்துரை தணிக்கைகளை நடத்தவும் மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைவருக்கும் மலிவு விலையில் ஜெனரிக் மருந்துகளை விற்பனை செய்வதற்காக, நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் 9600 க்கும் மேற்பட்ட பிரதமரின் ஜன் அவுஷாதி எனப்படும் பிரதமரின் மக்கள் மருந்தக மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் மருந்தகங்கள் தொடர்பாக சுகம் என்ற மொபைல் செயலியும் உள்ளது. மேலும் இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை மேலும் ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 7 ஆம் தேதி ஜன் அவுாதி தினம் கொண்டாடப்படுகிறது.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ், பொது சுகாதார மையங்களில் அத்தியாவசிய ஜெனரிக் மருந்துகளை இலவசமாக வழங்க ஆதரவு வழங்கப்படுகிறது. மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவார் மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.



# டுவிட்டரில் டார்க் மோட் மட்டும் தான் இருக்கும்

## எலான் மஸ்க் ட்வீட்



நியூயார்க், ஜூலை 29

ட்விட்டர் (எக்ஸ்) சமூக வலைதளத்தில் டார்க் மோட் மட்டுமே இருக்கும் என அதன் உரிமையாளர் எலான் மஸ்க் ட்வீட் மூலம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது ட்விட்டர் பயனர்களுக்கு அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள் ளது. டுவிட்டர் நிறுவனத்தை எலான் மஸ்க் கடந்த ஆண்டு வாங்கி இருந்தார். அது முதல் அந்த தளத்தில் பல்வேறு மாற் றங்களை தன் விருப்பத்துக்கு ஏற்ப மேற்கொண்டு வருகிறார். ஊழியர்களை பணி நீக்கம் செய்வது, ட்விட்டர் அலுவலக பொருட்கள் விற்பனை, தடை செய்யப்பட்டவர்களை மீண்டும் ட்விட்டர் தளத்தில் இயங்க அனுமதித்தது, அங்கீகரிக்கப்பட்ட பயனர்களிடத்தில் சந்தா கட்டணம் என அது நீள்கிறது.

ட்விட்டருக்கு போட்டியாளர்கள் ஏராளமாக உருவானாலும் அதை கண்டும் காணாமல் மஸ்க் இந்த அதிரடியை தொடர் கிறார். அண்மையில் ட்விட்டரின் லோகோ மற்றும் பெயரை மாதிரி இருந்தார். தற்போது X என இந்த தளம் அறியப்பட்டு வருகிறது. இந்த தளத்தில் வெகு விரைவில் டார்க் மோட் மட்டுமே இருக்கும் என மஸ்க் ட்வீட் செய்திருந்தார். டிசைனர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு மஸ்க் இப்படி பதில் தெரிவித்திருந்தார்.

ட்விட்டர் தளத்தில் தற்போது பயனர்கள் லைட் மற்றும் டார்க் மோடினை பயன்படுத்தலாம். இது தவிர டிம் மோடும் இதில் உள்ளது. மஸ்க் சொன்னது போல டார்க் மோட் மட்டும் ட்விட்டரில் இருந்தால் லைட் மற்றும் டிம் மோட் விடைபெறும். இது பயனர்கள் மத்தியில் கலவையான வரவேற்பை பெற்றுள்ளது.

# ஜூன் காலாண்டில் சுந்தரம் ஃபாஸ்னர்ஸ் ரூ.129 கோடி நிகர லாபம் ஈட்டியது




சென்னை, ஜுலை 29

வாகன உதிரி பாக உற்பத்தி நிறுவனமான சுந்தரம் ஃபாஸ்னர்ஸின் ஒருங்கிணைந்த நிகரலாபம் கடந்த ஜூன் காலாண்டில் ரூ.128.74 கோடியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து சுந்தரம் ஃபாஸ்னர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த நிகர லாபம் ரூ.128.74 கோடியாக உள்ளது. அதற்கு முந்தைய 2022-23ம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் அது ரூ.138.03 கோடியாக இருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில் தற்போது நிறுவனத்தின் ஒருங்கிணைந்த நிகர லாபம் குறைந்துள்ளது.

கடந்த ஏப்ரல்-மார்ச் காலாண்டில் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டு வருவாய் ரூ.1,415.27 கோடியாகக் குறைந்துள்ளது. அதற்கு முந்தைய 2022-23-ஆம் நிதியாண்டின் இதே காலாண்டில் இது ரூ.1,421.70 கோடியாக இருந்தது.

மேலும், மதிப்பீட்டு காலாண்டில் நிறுவனத்தின் உள்நாட்டு விற்பனை ரூ.798.50 கோடியிலிருந்து ரூ.821.97 கோடியாக அதிகரித்துள்ளது. எனினும், அமெரிக்கச் சந்தையில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக, ஏற்றுமதி ரூ.405.76 கோடியிலிருந்து ரூ.347.99 கோடியாகக் குறைந்துள்ளது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்ஜெட் விலையில் போக்கோ பாட்ஸ்

# இந்திய சந்தையில் அறிமுகம்

மும்பை, ஜூலை 29

போக்கோ நிறுவனம் இந்திய சந்தையில் தனது புதிய போக்கோ பாட்ஸ் இயர்பட்ஸ்-ஐ அறிமுகம் செய்துள்ள செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: புதிய போக்கோ பாட்ஸ் அம்சங்கள், ரெட்மி பட்ஸ் 4 ஆக்டிவ் மாடலில் உள்ளதை போன்றே வழங்கப்பட்டு இருக்கிறது. எனினும், இது வித்தியாசமான நிறங்களில் கிடைக்கிறது.

புதிய போக்கோ பாட்ஸ் இயர்பட்ஸ் மாடலில் 12 மில்லிமீட்டர் டிரைவர்கள், கூகுள் பாஸ்ட் பேர் சப்போர்ட், ப்ளூடூத் 5.3, ஐபிஎக்ஸ்4 வாட்டர் ரெசிஸ்டன்ட் வசதி, டச் கன்ட்ரோல்கள், லோ-லேடன்சி மோட் உள்ளிட்டவை வழங்கப்பட்டு இருக்கிறது.

இதில் உள்ள பேட்டரியை முழுமையாக சார்ஜ் செய்தால் 30 மணி நேரத்திற்கு பேட்டரி பேக்கப் வழங்குகிறது. இதனுடன் வழங்கப்படும் சார்ஜிங் கேசில் 440 எம்ஏஹெச் பேட்டரி வழங்கப்பட்டு இருக்கிறது. பாஸ்ட் சார்ஜிங் வசதி மூலம் இந்த இயர்பட்ஸ்-ஐ 10 நிமிடங்கள் சார்ஜ் செய்தால் 90 நிமிடங்கள் வரை பயன்படுத்த முடியும். போக்கோ பாட்ஸ் இயர்பட்ஸ் மிட்நைட் குரூவ் வண்ணத்தில் கிடைக்கிறது. இந்த இயர்பட்ஸ் பிளாக் மற்றும் எல்லோ நிறங்களில் கிடைக்கிறது. அறிமுக சலுகையாக இந்த இயர்பட்ஸ் 1,199 விலையில் வாங்கிட முடியும். விற்பனை ப்ளிப்கார்ட் வலைதளத்தில் துவங்குகிறது.

